வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3387 /ஆ2/2024 நாள்: 20.08.2024

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி-"தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை" விளையாட்டுப் போட்டிகள்-இணையதளம் மூலம் முன்பதிவு செய்ய தெரிவித்தல்-சார்பு. |
| பார்வை | மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலரின் கடிதம் (மின்னஞ்சல் மூலமாக) ந.க.எண்.115/2024 நாள்:17.08.2024 |

----------

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.இவ்வாண்டில் நடத்தப்பட இருக்கும் போட்டிகளில் வெவ்வேறு விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டு பள்ளி கல்லூரி மாணவ மாணவியர் மாற்றுத்திறனாளிகள் பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் 27 விளையாட்டுக்கள் 53 வகைகளில் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான "தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை" விளையாட்டுப் போட்டிகள் வரும் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடத்தப்பட உள்ளது.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு 12 வயது முதல் 19 வயது வரையிலும், 15 வயது முதல் 35 வயது வரை பொது பிரிவினருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

எனவே, இப்போட்டிகளில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள அனைவரையும் தங்களின் விவரத்தினை https://sdat.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்திட கடைசி நாள் 25.08.2024 என்பதால் இணையதளம் மூலம் முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே போட்டிகளில் பங்கு பெற முடியும் எனவே ஆவணங்களை சமர்ப்பித்து பதிவேற்றம் செய்யுமாறு அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: பார்வையில் காணும் கடிதம்.

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்,
அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர்.